**2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 11.4.2026 அன்று, இலால்குடி, மண்ணச்சநல்லூர், திருவரங்கம், திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:**




● இலால்குடி பேருந்து நிலையம் பகுதியில், இலால்குடி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் த.பாரிவள்ளல் அவர்களை ஆதரித்து பரப்புரை செய்தார்.




● மண்ணச்சநல்லூர் நம்பர்–1 டோல்கேட் பகுதியில், மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் சீ.கதிரவன் அவர்களை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.




● திருவரங்கம் ராஜகோபுரம் பகுதியில், திருவரங்கம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் எஸ்.துரைராஜ் அவர்களை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.




● திருச்சி, தென்னூர் அரசமரத்தடி பகுதியில், திருச்சி மேற்குத் தொகுதி வேட்பாளர் கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.




● திருச்சி மரக்கடை பகுதியில், திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் முனைவர் தா.இனிகோ இருதயராஜ் அவர்களை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.




● திருவெறும்பூர் பேருந்து நிலையம் பகுதியில், திருவெறும்பூர் தொகுதியின் கழக வேட்பாளர், அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களை ஆதரித்து, பரப்புரை செய்தார்.